www.tamilarangam.net

# கண்ணீர் அஞ்சலி!



இந்தியாவின் முன்னாள் பிரதமரும்..... இந்திரா காங்கிரசின் தலைவரும்... நடைபெறவிருந்த இந்திய பொதுத்தேர்தலில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவார் என எதிர்பார்க்கப்பட்டவருமான திரு. ராஜீவ் காந்தி விடுதலைப் புலிகளினால் கோரத்தனமாக கொலை செய்யப்பட்டது குறித்து நாம் அதிர்ந்து போயுள்ளோம்.

தமது தாயாரான திருமதி. இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டபின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட திரு. ராஜீவ் காந்தி தமது 46 வது வயதில் புலிகளினால் கோழைத்தனமாக கொல்லப்பட்டுள்ளார்.

திரு. ராஜீவ் காந்தி இந்திய மக்களால் மட்டுமல்ல உலகின் பெரும்பான்மை மக்களால் அறியப்பட்டவர். சர்வதேச தலைவர்களால் மதிக்கப்பட்டவர். உலகப் பத்திரிகையாளரால் விரும்பப்பட்டவர்.

இந்தியாவில் புதிய மாற்றங்களை ஏற்படுத்த முனைந்த இவர் நவீன விஞ்ஞான தொழில்நுட்பவியலை நோக்கி இந்தியாவை இட்டுச் சென்றவர். சர்வதேசஅரங்கில் இந்தியாவின் மதிப்பு உயரக் காரணமாயிருந்தவர்.

உலகின் ஒடுக்கப்படும் மக்களது விடுதலை இயக்கங்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்ததுடன் அவற்றுக்கான தமது ஆதரவையும் வழங்கி வந்தவர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திரு. ராஜீவ் காந்தி சோசலிச நாடுகளுடனும், மூன்றாவது உலக நாடுகளுட னும் மிக நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்ததுடன் மேற்கத்திய நாடு களுடனும் நல்லுறவை வளர்த்தவர்.

இந்தியாவின் ஐக்கியமும், உறுதிப்பாடும் குலையாமல் இருப்பதற்காக அய ராது உழைத்த திரு. ராஜீவ் காந்தி ஏகாதிபத்தியக் காலடிகள் இந்திய உப கண்டத்தில் பதிவதை எதிர்த்து நின்றவர்.

இவை அனைத்துக்கும் மேலாக ஈழ மக்களின்பால் மிகுந்த அன்பும், அவர்களது பிரச்சனையைத் தீர்ப்பதில் பெருத்த ஆர்வமும் கொண்டவர். ஈழமக்கள் மீது இனப் படுகொலையை கட்டவிழ்த்து வரும் சிறீலங்கா அரசுக்கு பலத்த அச்சுறுத்தலாக விளங்கிய திரு. ராஜீவ் காந்தி இந்திய - சிறீலங்கா ஒப்பந்தத்தினூடாக தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காணமுனைந்தவர்.

சிறீலங்கா இனவாத அரசின் படுகொலைகளுக்குள்ளும், புலிகளின் மிலேச்சத் தனமான ஆயுததர்பாருக்குள்ளும் சிக்கித் தவிக்கும் எம்மக்களுக்கு நம்பிக்கை ஒளிக்கீற்றாய் தெரிந்த திரு. ராஜீவ் காந்தி இன்று நச்சுத்தனமாக புலிகளால் கொல்லப்பட்டுள்ளார்.

இப்படுகொலையின் மூலம் ஈழமக்களது எதிர்காலமும்..... இந்தியாவின் ஐக் கியம் மற்றும் உறுதிப்பாடும் கேள்விக் குறிகளாக்கப்பட்டுள்ளன.

அடங்காத இரத்தவெறி கொண்டவர்களான புலிகளால் நிகழ்த்தப்பட்ட இந் தப் பாசிசப் படுகொலையால் ஈழமக்கள் ஆகிய நாம் அனைவரும் சர்வதேச சமு கத்தின் முன் படுகொலையாளர்களாக்கப்பட்டு வெட்கித் தலைகுனிகிறோம்.

இக்கட்டான இந்தக்காலகட்டத்தில் தமதுதலைவனை இழந்துதவிக்கும் இந்திய மக்களுக்கும்...... இந்திரா காங்கிரசிற்கும் திரு. ராஜீவ் காந்தியின் குடும்பத் தினருக்கும் கலங்கியநெஞ்சுடன் எமது கண்ணீர் அஞ்சலியை ஈழமக்கள் புரட்சிகர முன்னணியின் சார்பாக தெரிவிக்கிறோம்.

ஈழமக்கள் மீதும், ஈழ மக்கள் புரட்சிகர முன்னணியின் மீதும் திரு. ராஜீவ் காந்தி கொண்ட அன்பையும் அபிமானத்தையும் இங்கே மீண்டும் நினைவு கூர்வது டன் இந்திய மக்களுக்கு ஏற்பட்ட மாறாத்துயரில் நாமும் பங்கெடுத்துக் கொள்கிறோம்.

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி – பிரான்சு

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்